**தினமணி**
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள

| | |
|---|---|
| ஈரோடு | 94425-04157 |
| கோபி | 98430-28989 |
| சத்தி | 94438-96939 |
| பவானி | 98659-73880 |
| மொடக்குறிச்சி | 98428-20900 |
| பெருந்துறை | 80125-20684 |
| உதகை/குன்னூர் | 94432-12111 |
| கூடலூர் | 94860-89375 |

**தினமணி**
எமது செய்தியாளர்களை தொடர்புகொள்ள

| | |
|---|---|
| திருப்பூர் | 85088-02828 |
| பல்லடம் | 99523-15083 |
| உடுமலை | 94434-31489 |
| வெள்ளக்கோவில் | 98657-70640 |
| அவிநாசி | 99427-83423 |
| காங்கயம் | 92451-17207 |


## சிறப்பு அலங்காரம்...



அவிநாசி அருகே உள்ள சேவூர் கல்யாண வெங்கட்ரமண பெருமாள் கோயிலில் வியாழக்கிழமை நடைபெற்ற ராம நவமி விழாவில் சிறப்பு அலங்காரத்தில் பக்தர்களுக்கு அருள்பாலித்த ஸ்ரீதேவி, பூதேவி சமேத வெங்கடேச பெருமாள்.

# பச்சைமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் ஏப்ரல் 5இல் பங்குனி உத்திர தேர்த் திருவிழா

**கோபி, மார்ச் 30:** கோபிசெட்டிபாளையம் பச்சைமலை சுப்பிரமணிய சுவாமி கோயிலில் பங்குனி உத்திர தேர்த் திருவிழாவையொட்டி கோயில் கொடிமரத்தில் சேவற்கொடி ஏற்றும் நிகழ்ச்சி வியாழக்கிழமை நடைபெற்றது. முக்கிய நிகழ்வான தேர்த் திருவிழா ஏப்ரல் 5ஆம் தேதி நடைபெறுகிறது.

பச்சைமலை சுப்பிரமணிய சுவாமி கோயில் பங்குனி உத்திர தேர்த் திருவிழாவையொட்டி மார்ச் 31ஆம் தேதி முதல் ஏப்ரல் 3ஆம் தேதி வரை யாகசாலை பூஜைகள், சுவாமி தேர் வீதி உலா வருதல் நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன. 4ஆம் தேதி காலை 11 மணி அளவில் கல்யாண சுப்பிரமணியருக்கு திருக்கல்யாண உற்சவம் நடைபெறவுள்ளது. முன்னதாக காலை 9 மணியளவில் சண்முகருக்கு சிகப்புசாத்தி அலங்காரம் நடைபெறவுள்ளது.

விழாவின் முக்கிய நிகழ்ச்சியான தேர்த்திருவிழா 5ஆம் தேதி நடைபெறவுள்ளது. இதையொட்டி அன்று காலை 6 மணிக்கு அபிஷேகம், 8 மணி அளவில் திருப்படி பூஜை, காலை 9 மணி அளவில் சண்முகருக்கு பச்சை சாத்தி அலங்காரம் நடைபெறவுள்ளது. தேர் வடம் பிடித்து இழுக்கும் நிகழ்ச்சி மாலை 4 மணி அளவில் நடைபெறவுள்ளது.

6ஆம் தேதி மாலை 5 மணி அளவில் பரிவேட்டை, குதிரை வாகனத்தில் சுவாமி வலம் வருதல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. மாலை 6.30 மணி அளவில் வள்ளி-தெய்வானை உடன் சண்முகர் பெருமான் மலர் பல்லக்கில் நகர்வலம் வருதல் நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

# ஈரோடு மாவட்டத்தில் 4,027 டன் யூரியா இருப்பு

**ஈரோடு, மார்ச் 30:** ஈரோடு மாவட்டத்தில் 4,027 டன் யூரியா இருப்பு உள்ளது என வேளாண் இணை இயக்குநர் சி.சின்னசாமி கூறினார்.

ஈரோடு மாவட்டத்துக்கு தூத்துக்குடியில் இருந்து ஸ்பிக் நிறுவனத்தின் 301 டன் யூரியா, 127 டன் டிஏபி, 893 டன் காம்ப்ளக்ஸ் உரங்கள் மற்றும் கொச்சியில் இருந்து பேக்ட் நிறுவனத்தின் 1,370 டன் காம்ப்ளக்ஸ் உரம் ஆகியவை ரயில் மூலம் வியாழக்கிழமை ஈரோடு வந்தடைந்தது. இவற்றை ஈரோடு மாவட்ட வேளாண் இணை இயக்குநர் சி.சின்னசாமி, உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) அ.வைத்தீஸ்வரன், வேளாண் அலுவலர் ஜெயச்சந்திரன் ஆகியோர் ஆய்வு செய்தனர்.

அப்போது வேளாண் இணை இயக்குநர் சி.சின்னசாமி கூறியதாவது: ஈரோடு மாவட்டத்தில் விவசாயிகள் பயிர் சாகுபடி மேற்கொள்ள ஏதுவாக தற்போது யூரியா 4,027 டன், டிஏபி 2,894 டன், பொட்டாஷ் 3,133 டன், காம்ப்ளக்ஸ் 11,086 டன், சூப்பர் பாஸ்பேட் 856 டன் தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தனியார் உர விற்பனை நிலையங்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

விவசாயிகள் தங்கள் வட்டார வேளாண் விரிவாக்க மையங்களில் வழங்கப்படும் திரவ உயிர் உரங்களை பெற்று பயன்படுத்தலாம். தவிர ஈரோடு திண்டலில் உள்ள வேளாண் துறையின் மண் பரிசோதனை நிலையத்தில் மண் பரிசோதனை செய்து அவர்களது பரிந்துரைப்படி உரங்களை பயன்படுத்தினால் உரச்செலவு குறையும் என்றார்.

# 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு: ஈரோடு மாவட்டத்தில் 25,591 பேர் எழுதுகின்றனர்

**ஈரோடு, மார்ச் 30:** ஈரோடு மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வை 25,591 மாணவ, மாணவியர் எழுதுகின்றனர்.

பிளஸ் 2 பொதுத் தேர்வு ஏப்ரல் 3 ஆம் தேதியும், பிளஸ் 1 பொதுத் தேர்வு 5 ஆம் தேதியும் நிறைவுபெற உள்ளன. இதைத் தொடர்ந்து 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு ஏப்ரல் 6 ஆம் தேதி தொடங்கி 20 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

ஈரோடு மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வை 358 பள்ளிகளில் படிக்கும் 25 ஆயிரத்து 591 மாணவ, மாணவியர் எழுத உள்ளனர். மாணவர்கள் தேர்வு எழுத 113 தேர்வு மையங்கள், தனித் தேர்வர்கள் தேர்வு எழுதுவதற்கு கூடுதலாக 6 மையங்கள் என மொத்தம் மாவட்டத்தில் 119 மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

10ஆம் வகுப்பு பொதுத் தேர்வு வினாத்தாள் ஈரோடு உள்பட மாவட்டத்தில் 7 கட்டு காப்பு மையங்களில் வைக்கப்பட்டு அங்கு துப்பாக்கி ஏந்திய போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. மேலும் வினாத்தாள் மையத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்தப்பட்டு 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

ஈரோடு மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு பொதுத்தேர்வு விடைத்தாள் திருத்துவதற்கு ஈரோடு செங்கோடம்பள்ளம் யூஆர்சி பள்ளி, கோபி குருகுலம் பள்ளி, சத்தியமங்கலம் ராகவேந்திரா பள்ளி ஆகிய 3 இடங்களில் மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

# கிராம நிர்வாக அலுவலர்கள் ஆர்ப்பாட்டம்

**ஈரோடு, மார்ச் 30:** தமிழ்நாடு கிராம நிர்வாக அலுவலர்கள் முன்னேற்ற சங்கம் சார்பில் ஈரோடு வட்டாட்சியர் அலுவலக வளாகத்தில் ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை நடந்தது.

ஆர்ப்பாட்டத்துக்கு ஈரோடு வட்டக் கிளை தலைவர் சம்பத்குமார் தலைமை வகித்தார். ஆர்ப்பாட்டத்தில் பழைய ஓய்வூதியத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். மத்திய அரசுக்கு இணையாக அகவிலைப்படி வழங்க வேண்டும். பயணப்படியை ரூ.2 ஆயிரமாக உயர்த்தி வழங்க வேண்டும். கருணை அடிப்படையில் பணி நியமனம் பெற்ற கிராம நிர்வாக அலுவலர்களுக்கு காலதாமதமின்றி பணி வரன்முறை செய்ய வேண்டும்.

நகர நில வரித் திட்ட கணக்குகளை முழுமையாக கிராம நிர்வாக அலுவலர்களுக்கு வழங்கிட வேண்டும். வருவாய்த் துறை பணிகளைத் தவிர பிற பணிகள் திணிப்பை கைவிட வேண்டும் என்பன உள்பட பல்வேறு கோரிக்கைகள் வலியுறுத்தப்பட்டன.

# மலைச் சரிவில் தவறி விழுந்து பெண் யானை பலி



கோர்மாளம் கெத்தேசால் பகுதியில் இறந்துகிடந்த பெண் யானை.

**சத்தியமங்கலம், மார்ச் 30:** கோர்மாளம் மலைச் சரிவில் ஏறிய கருவுற்ற பெண் யானை தவறி விழுந்து உயிரிழந்த சம்பவம் குறித்து வனத் துறையினர் விசாரித்து வருகின்றனர்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், கோர்மாளம் வனச் சரகம், கெத்தேசால் வனப் பகுதியில் வனத் துறையினர் வழக்கமான கண்காணிப்புப் பணியில் வியாழக்கிழமை ஈடுபட்டிருந்தனர். அப்போது, கெத்தேசால் மலைச் சரிவில் 30 வயதுள்ள பெண் யானை இறந்துகிடப்பது தெரியவந்தது. இது குறித்து கால்நடை மருத்துவர் மற்றும் புலிகள் காப்பக இணை இயக்குநருக்கு வனத் துறை ஊழியர்கள் தகவல் தெரிவித்தனர்.

வனத் துறை அதிகாரிகள் அங்கு வந்து ஆய்வு செய்தனர். இறந்த கிடந்த 30 வயதுள்ள பெண் யானையின் வயிறு பெரிதாக இருந்ததால் கருவுற்றிருக்கலாம் என்றும் அங்குள்ள ஓடையில் நீர் அருந்திவிட்டு மலைச் சரிவில் ஏறும் போது கால் இடறி தவறி விழுந்ததில் இறந்திருக்கலாம் என்றும் வனத் துறையினர் தெரிவித்தனர். கால்நடை மருத்துவர் தலைமையில் யானையின் உடலை அதே இடத்தில் உடல் கூறாய்வு மேற்கொள்ள வனத் துறையினர் நடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

அந்தியூர் பகுதியில் மலைச் சரிவில் ஏறும்போது தாய் யானையுடன் குட்டியும் தவறி விழுந்து அண்மையில் இறந்தது குறிப்பிடத்தக்கது.

# கடம்பூர் மலைப் பகுதியில் இடி தாக்கி விவசாயி பலி

**சத்தியமங்கலம், மார்ச் 30:** கடம்பூரை அடுத்த எக்கத்தூர் கெம்பநாயக்கனூரைச் சேர்ந்த விவசாயி இடிதாக்கி வியாழக்கிழமை உயிரிழந்தார்.

சத்தியமங்கலம் புலிகள் காப்பகம், கடம்பூரை அடுத்த எக்கத்தூர் கெம்பநாயக்கனூரை சேர்ந்தவர் மூர்த்தி (25), விவசாயி. கடம்பூர் மலைப் பகுதியில் பலத்த காற்றுடன் வியாழக்கிழமை மழை பெய்தது. அப்போது விவசாயப் பணியில் ஈடுபட்டிருந்த மூர்த்தி அருகில் இருந்த மரத்தடியில் தஞ்சம் அடைந்தார். அப்போது பலத்த சப்தத்துடன் மரத்தின் மீது இடி தாக்கியதில் உடல் கருகி சம்பவ இடத்திலேயே மூர்த்தி உயிரிழந்தார். இச்சம்பவம் குறித்து கடம்பூர் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

# கொள்முதல் விலையை உயர்த்தக் கோரி தொடர் போராட்டம்

## பால் உற்பத்தியாளர்கள் சங்கம் அறிவிப்பு

**ஈரோடு, மார்ச் 30:** பால் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி கறவை மாடுகளுடன் வெள்ளிக்கிழமை (மார்ச்31) முதல் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட உள்ளதாக பால் உற்பத்தியாளர்கள் அறிவித்துள்ளனர்.

இதுகுறித்து தமிழ்நாடு பால் உற்பத்தியாளர் சங்க மாநில பொருளாளர் ஏ.எம்.முனுசாமி வெளியிட்ட அறிக்கை: கால்நடைகளுக்குத் தேவையான பருத்திக்கொட்டை, பிண்ணாக்கு, பசுந்தீவனம், உலர் தீவனம், ஆள்கள் கூலி கடுமையாக உயர்ந்துள்ளன. அண்மையில் தமிழக அரசு அறிவித்த பால் கொள்முதல் விலை போதுமானதாக இல்லை.

தற்போது தனியார் நிறுவனங்கள் ஆவின் நிறுவனத்தைக் காட்டிலும் ஒரு லிட்டருக்கு ரூ. 5 முதல் ரூ. 10 வரை கூடுதலாக கொள்முதல் விலை வழங்கின்றன. இதனால் ஆவின் கூட்டுறவு சங்கங்களுக்கு வரும் பாலின் அளவு படிப்படியாக குறைந்து பல சங்கங்கள் மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. பால் வரத்து தொடர்ந்து குறைவதால் ஆவின் பால் நுகர்வோருக்கு முறையாக பாலை வழங்க முடியாத நிலையும் நீடிக்கிறது. இந்த நிலை நீடித்தால் தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் மூடும் நிலைக்குத் தள்ளப்படும்.

தொடக்க பால் கூட்டுறவு சங்கங்கள் மூடப்பட்டுவிட்டால் தனியார் நிறுவனங்கள் பால் தொழிலில் ஆதிக்கம் செலுத்தி பால் உற்பத்தியாளர்களை அடிமைப்படுத்தி குறைந்த விலைக்கு பாலை கொள்முதல் செய்யும் ஆபத்து ஏற்படும்.

பால் கொள்முதல் விலையை ஒரு லிட்டருக்கு ரூ.7 வீதம் உயர்த்தி பசும் பாலுக்கு, ரூ. 42, எருமை பாலுக்கு ரூ. 51 என உயர்த்தி அறிவிக்க வேண்டும். மானிய விலையில் தரமான கலப்புத் தீவனம் வழங்க வேண்டும். தொடக்க பால் கூட்டுறவு சங்க ஊழியர்களுக்கு ஊதிய உயர்வு, பணி பாதுகாப்பு வழங்கிட வேண்டும். இதற்கு ஆகும் செலவில் 50 சதவீதத் தொகையை ஆவின் நிறுவனமும் மீதத்தை அரசும் வழங்க வேண்டும்.

பாலின் தரத்தை நிர்ணயம் செய்ய எம்ஆர்எஃப் (மாடிபைடு ரிச்மென்ட் பார்முலா) முறையைக் கைவிட்டு ஐஎஸ்ஐ(இண்டியன் ஸ்டாண்டர்டு இன்ஸ்டிடியூஷன்) முறையை அமல்படுத்த வேண்டும்.

ஆவினில் நிலவும் ஊழல், நிர்வாக சீர்கேடுகளைத் தடுக்க வேண்டும். கர்நாடகம் உள்ளிட்ட பிற மாநிலங்களில் பாலுக்கு ஊக்கத் தொகை வழங்குவதைப்போல் தமிழக அரசும் லிட்டருக்கு ரூ. 5 வழங்க வேண்டும். இக்கோரிக்கைகளை வலியுறுத்தி மாநிலம் தழுவிய அளவில் கறவை மாடுகளுடன் ஆர்ப்பாட்டம் நடத்துவது என மாநிலக் குழு அறிவித்துள்ளது. இதன்படி ஈரோடு மாவட்டத்தில் விஜயமங்கலம், சத்தியமங்கலம், மேட்டுக்கடை, அரியப்பம்பாளையம், வேமாண்டம்பாளையம், அந்தியூர், கள்ளிமடைகுட்டை உள்ளிட்ட பல இடங்களில் போராட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. வெள்ளிக்கிழமை(மார்ச்31) காலை விஜயமங்கலத்திலும், அடுத்தடுத்த நாள்களில் பிற ஊர்களிலும் போராட்டம் நடத்தப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# உதகையில் குதிரைப் பந்தயம் நாளை தொடக்கம்

**உதகை, மார்ச் 30:** உதகையில் 136ஆம் ஆண்டு குதிரைப் பந்தயம் ஏப்ரல் 1ஆம் தேதி தொடங்கி மே 28ஆம் தேதி வரை நடைபெற உள்ளது என மெட்ராஸ் ரேஸ் கிளப் கமிட்டி தெரிவித்துள்ளது.

இது குறித்து மெட்ராஸ் ரேஸ் கிளப் கமிட்டி வியாழக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

மெட்ராஸ் ரேஸ் கிளப் நிர்வாகம் சார்பில் உதகையில் ஆண்டுதோறும் குதிரைப் பந்தயம் நடைபெறுவது வழக்கம். இந்த ஆண்டு குதிரைப் பந்தயம் ஏப்ரல் 1ஆம் தேதி தொடங்கி மே 28ஆம் தேதி வரை நடைபெறவுள்ளது. இந்தப் பந்தயத்தில் பல்வேறு மாநிலங்களில் இருந்து 550 குதிரைகள் பங்கேற்கின்றன .

வெள்ளி, சனி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் என மொத்தம் 17 நாள்கள் பந்தயங்கள் நடக்கும். இதில் 24 குதிரை பயிற்சியாளர்கள் மற்றும் 37 ஜாக்கிகள் கலந்துகொள்கின்றனர்.

முக்கியப் பந்தயங்களான தி நீல்கிரிஸ் 1000 கீனிஸ் கிரேட் என்ற பந்தயம் ஏப்ரல் 14ஆம் தேதியும், தி நீல்கிரிஸ் 2000 கீனிஸ் கிரேட் 3 பந்தயம் ஏப்ரல் 15ஆம் தேதியும், தி நீல்கிரிஸ் டர்பி ஸ்டேக்ஸ் கிரேட் 1 பந்தயம் மே 7ஆம் தேதியும் நடைபெற உள்ளன.


இது தவிர முக்கியப் போட்டியான நீலகிரி தங்க கோப்பை பந்தயம் மே 27 மற்றும் 28ஆம் தேதிகளில் நடைபெற உள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


**அறிவிப்பு**

கோவை 641032, குமிட்டிபதி அஞ்சல், ஒத்தக்கால்மண்டபம் வழி, சின்னத்தம்பிக்கவுண்டர் வீதி, (லேட்). நஞ்சப்பகவுண்டர் அவர்களின் குமாரர் திரு.சாந்தலிங்ககவுண்டர் (கைபேசி எண்: 99522 84304) ஆகிய எனக்கும், எனது குமாரன் திரு.கணேசன் பெயருக்கும் பிச்சனூர் கிராமம், க.ச.422 நெ.காலையில் உள்ள பூமிக்கு உண்டான ஆவணமான 1-317/1997 நெ.விடுதலை ஆவணத்தின் அசல் மதுக்கரை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அருகில் 09.02.2023-ம் தேதியன்று காணாமல் போய்விட்டது. மேற்படி ஆவணமானது நெ.காலைக்கு உட்பட்டது. அதுகுறித்து ஏற்கனவே அறிவிப்பும் செய்யப்பட்டு விட்டது. மேற்படி ஆவணம் கிடைக்கபெற்றால் உடனடியாக மேற்கண்ட முகவரிக்கு தகவல் தெரிவிக்கவும்.

உடனடிச் செய்திகள் சூடாக சுருக்கமாக...
www.dinamani.com

**22ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி**



தோற்றம் : 05.09.1940
மறைவு : 31.03.2001

**R.காளியண்ணன்** அவர்கள்

R.காளியண்ணன் & சன்
சரவணகிரி ஸ்பின்னிங் மில் பிரைவேட் லிமிடெட்
RK வீவ்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்
பள்ளிபாளையம், ஈரோடு – 638 006.


# ஈரோட்டில் தேசிய நுகர்வோர் தின விழா



உலக நுகர்வோர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழை வழங்குகிறார் மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.சந்தோஷினி சந்திரா.

**ஈரோடு, மார்ச் 30:** உணவுப்பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் தேசிய நுகர்வோர் தின விழா மற்றும் உலக நுகர்வோர் உரிமைகள் தின விழா ஈரோட்டில் நடைபெற்றது.

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் வியாழக்கிழமை நடைபெற்ற விழாவுக்கு மாவட்ட வருவாய் அலுவலர் எஸ்.சந்தோஷினி சந்திரா தலைமை வகித்தார். விழாவில் உலக நுகர்வோர் தினத்தையொட்டி நடத்தப்பட்ட பேச்சு, கட்டுரை, ஓவியப் போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு கேடயம் மற்றும் சான்றிதழ்கள் மற்றும் மாவட்ட அளவில் செயல்படும் சிறந்த நுகர்வோர் மன்றங்களுக்கு பரிசுத் தொகையை மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கினார்.

பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் நுகர்வோர் விழிப்புணர்வு தொடர்பான கண்காட்சி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தன. இதனை பள்ளி, கல்லூரி மாணவர்கள் பார்வையிட்டனர்.

விழாவில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் (பொறுப்பு) சிவகுமரன், வேளாண் இணை இயக்குநர் சி.சின்னசாமி, தொழிலாளர் உதவி ஆணையர் திருஞானசம்பந்தம், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக மண்டல மேலாளர் பானுமதி, பறக்கும் படை தனி வட்டாட்சியர் ஜெயகுமார், வட்ட வழங்கல் அலுவலர் கார்த்திகேயன் மற்றும் நுகர்வோர் அமைப்புகளின் நிர்வாகிகள் பங்கேற்றனர்.




அருள்மிகு **பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில்**
பண்ணாரி அஞ்சல் - 638401, சத்தியமங்கலம் வட்டம், ஈரோடு மாவட்டம்.
அ.கு.எண் : 638 401 - (04295) 243289

**2023ம் ஆண்டு பங்குனி குண்டம் பெருந்திருவிழா**

| | |
|---|---|
| 03.04.2023 திங்கட்கிழமை இரவு அதாவது<br>04.04.2023 செவ்வாய்க்கிழமை அதிகாலை 4.00 மணி | குண்டம் இறங்குதல் |
| 10.04.2023 திங்கட்கிழமை | மறுபூஜை திருவிழா |

1. குண்டம் இறங்கும் பக்தர்கள் பருத்தி ஆடை அணிந்து வர வேண்டுகிறோம்.
2. குண்டம் இறங்கும் பக்தர்கள் குண்டத்திலிருந்து நேரடியாக அம்மனை தரிசித்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே, குண்டம் இறங்கும் பக்தர்கள் விரைவாக அம்மனை தரிசித்து செல்லுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
3. திருக்குண்டத்திற்கு எரிகரும்பு உபயம் செய்ய விரும்பும் பக்தர்கள் ஊஞ்சை மற்றும் வேம்பு மரங்களை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
4. திருக்கோயில் வளாகங்களை தூய்மையாக வைத்திருக்க உதவிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.
5. குண்டம் இறங்க சிறப்பு அனுமதி பாஸ் இல்லையாதலால் பக்தர்கள் அனைவரும் வரிசையில் வந்து குண்டம் இறங்கி அம்மனை தரிசித்து செல்ல கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.
6. குண்டத்தில் நாணயங்கள், பாலித்தீன் பைகளுடன் உப்பு, மிளகு மற்றும் கற்பூரம் ஆகியவற்றை போடுவதை தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அனைவரும் வருக! அம்மன் அருள் பெறுக!

இங்ஙனம்,

வீ.புருசோத்தமன்,
ராஜாமணி தங்கவேல்
புஷ்பலதா கோதண்டராமன்,
வீ.மகேந்திரன்.
(பரம்பரை அறங்காவலர்கள்)

ஓம்/ இரா.மேனகா,
துணை ஆணையர் / செயல் அலுவலர்

விளம்பர உதவி

கரூர் வைஸ்யா பேங்க்
KVB Karur Vysya Bank
Smart way to bank
FD: 444 days @ 8.00%*
சத்தியமங்கலம் கிளை, 04295-220296

KVB டிஜிட்டல் லோன்கள்
நகைக்கடன் /வீட்டுக்கடன் /வாகனக்கடன் /அடமானக்கடன்
பேப்பர் இல்லா செயல்முறை

ADITYA BIRLA CAPITAL
PROTECTING INVESTING FINANCING ADVISING
ஆதித்ய பிர்லா ஃபைனான்ஸ் லிட்.
பதிவு அலுவலகம் : இந்தியன் ரேயான் காம்பௌண்டு, வேரவல், குஜராத் - 362266.
கிளை அலுவலகம் : அலகு #10 & 12, 4ஆவது தளம், ஒவல் வெங்கட் நாராயண் சாலை, தி.நகர், சென்னை - 600 017 மற்றும் எண் 739, 2ஆவது தளம், அவினாசி சாலை, அண்ணா சிலை, கோயம்புத்தூர் - 641018.
"பிற்சேர்க்கை IV-A"
[பார்க்க விதி 8(6)]
அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான விற்பனை அறிவிப்பு
கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002 (54/2002), விதி 8(6)-இன் கீழான அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான E-ஏல அறிவிப்பு